# இலங்கை துறைமுக அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி: முகாமையாளர் (துறைமுக காப்பு) (மத்திய முகாமைத்துவ முதலாம் மட்டம்)** – MLM 1

## POST OF MANAGER (HARBOUR SAFETY)

**(அ) தகுதித்திறன்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இரசாயனவியல் தொடர்பான சிறப்புப் பட்டம் மற்றும் தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தில் (NIOSH) தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா அல்லது அதற்கு சமனான தகைமை.

அத்துடன்

**அனுபவம்:**

குறித்த துறையில் சமமான பதவியொன்றில் ஐந்து (5) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 4 : 1 (MLM 1)

ஆரம்பச் சம்பளம் : ரூ. 92,650/=

வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,725/=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ. 185,000/= அளவினதாக இருக்கும்.

**02. பதவி : கடலக மற்றும் சேறுவாரிக்கல அதிபர் (மத்திய முகாமைத்துவ இரண்டாம் மட்டம்)** – MLM 2

## (POST OF NAVIGATION AND DREDGING MASTER)

**(அ) தகுதித்திறன்:**

கரையோர கடற் பயணங்களில் ஈடுபடும் மொத்த நிறை 3000 தொன்னை விட அதிகரிக்காத கப்பல்களில் கல அதிபராக சேவையிலீடுபடுவதற்கு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான சான்றிதழ்.

அல்லது

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு உயர் மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட வேறு உயர் மட்டத்திலான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

அத்துடன்

**அனுபவம்:**

இரண்டு (02) வருட குறித்த கடற் பயண அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 4 : 2 (MLM 2)

ஆரம்பச் சம்பளம் : ரூ. 82,505/=

வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,585/=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ. 175,000/= அளவினதாக இருக்கும்.

**03. பதவி : பகுதியின் தீயணைக்கும் அலுவலர் (கனிஷ்ட முகாமைத்துவ மட்டம்)** – JLM

## (POST OF DIVISIONAL FIRE OFFICER)

**(அ) தகுதித்திறன்**

ஐக்கிய இராச்சியத்தின் தீப் பொறியியல் நிறுவனத்தில் பட்டம்

அத்துடன்

**அனுபவம்:**

உரிய துறையில் சமமான பதவியொன்றில் ஐந்து (05) வருட அனுபவம்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 5 : 0 (JLM)

ஆரம்பச் சம்பளம் : ரூ. 75,065/=

வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,440/=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 170,000/=அளவினதாக இருக்கும்.

**குறிப்பு:**

1. தீயணைக்கும் படையின் ஆளணியினருக்கு பயிற்சி திட்டங்கள் தயாரித்தல் மற்றும் பயிற்சி திட்டங்களை நடாத்தும் ஆற்றல்.
2. கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.
3. சிறந்த உடல் உள தகுதித்திறனையும் மற்றும் சிறந்த கட்புல செவிப்புல ஆற்றலையும் உடையவராக இருத்தல் வேண்டும். (மருத்துவப் பரிசோதனையொன்றிற்கு தோற்றுதல் வேண்டும்.)

**குறிப்பு**

மேலே பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் 45 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயது எல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)

இலங்கை துறைமுக அதிகாரசபையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்), மனிதவளம் மற்றும் நிர்வாகப் பகுதி - நிறைவேற்றுப் பிரிவு, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2026.06.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையதளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்களை அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**